நிருபர்கள் தேவை
தமிழகமெங்கும் தினசரி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் தேவை. நிருபராக முன் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : 9080728304
மின்னஞ்சல்: dhinatamil.tn@gmail.com

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தமிழாய்! தமிழனாய்!! தமிழ்மொழிக்காய்!!!
தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936
www.dhinatamil.com — மாற்றத்தின் ஆரம்பம் — dhinatamil

நாகர்கோவில் பதிப்பு.23.02.2026 . மலர் 04 . இதழ்53. திங்கள்கிழமை . NAGERCOIL EDITION .23.02.2026 . VOL 04 . ISSUE 53. MONDAY . 4 PAGES . Rs.5

உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை
Whatsapp - ல்
பின் தொடர

## மீரட்டில் இந்தியாவின் அதிவேக

# மெட்ரோ ரயில் சேவை

## பிரதமர் மோடி தொடங்கி வைத்தார் !

புதுடெல்லி: பிப்.23-

தலைநகர் டெல்லி மீரட் இடையிலான 82 கிலோமீட்டர் தூரம் கொண்ட இந்தியாவின் முதல் நமோ பாரத் ஆர்ஆர்டிஎஸ் ரயில் பாதையில் எஞ்சியிருந்த பகுதிகளிலும் பணிகள் நிறைவடைந்த நிலையில் அந்த ரயில் சேவையை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். இதே போல 23 கிலோமீட்டர் தூரத்துக்கு அமைக்கப்பட்டுள்ள மீரட் மெட்ரோ ரயில் சேவையையும் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்.

தற்போது டெல்லி சாராய் கலே கான் முதல் நியூ அசோக் நகர் வரையிலான 5 கிலோமீட்டர் மற்றும் மீரட் தெற்கு முதல் மோதிபுரம் வரையிலான 21 கிலோமீட்டர் பகுதியையும் இந்த நமோ பாரத் ஆர்ஆர்டிஎஸ் ரயில் இணைக்கிறது. இதன் மூலம் டெல்லியில் இருந்து மீரட் நகருக்கு ஒரு மணி நேரத்தில் பயணிக்கலாம். இந்த ரயிலின் அதிகபட்சமாக மணிக்கு 160 கிலோமீட்டர் இயக்கப்படும்.

இன்று நடைபெற்ற இந்த தொடக்க விழா நிகழ்வில் பிரதமர் மோடி உடன், உத்தரப்பிரதேச மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் மற்றும் டெல்லி பிராந்திய போக்குவரத்து துறை அதிகாரிகள் இருந்தனர். ஷதாப்தி நகர் முதல் மீரட் தெற்கு வரையில் பிரதமர் மோடி ரயிலில் பயணித்தார். அவருடன் பயணித்த அதிகாரிகள் நமோ பாரத் ரயில் திட்டம் குறித்து விரிவான



விளக்கம் அளித்தனர். அப்போது சக பயணிகளுடன் பிரதமர் மோடி உரையாடினார்.

இந்த நிகழ்வுக்கு முன்னதாக காசியாபாத் விமான நிலையம் வந்த பிரதமர் மோடியை, உ.பி முதல்வர் யோகி ஆதித்யநாத் வரவேற்றார். அங்கிருந்து மீரட் சென்று நமோ பாரத் ஆர்ஆர்டிஎஸ் ரயில் சேவை மற்றும் மீரட் மெட்ரோ சேவையை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். தொடர்ந்து ரூ.12,930 கோடி மதிப்பிலான மக்கள் நலத்திட்ட பணிகளை நாட்டுக்கு அர்ப்பணித்தார். பொதுக்கூட்டம் ஒன்றிலும் அவர் பங்கேற்கிறார்.

நமோ பாரத் ஆர்ஆர்டிஎஸ் ரயில்: தலைநகர் டெல்லியில் இருந்து சாஹிபாபாத், காசியாபாத், மோதிநகர், மீரட் உள்ளிட்ட முக்கிய நகரங்களை இணைக்கும் வகையிலும், இந்த பகுதிகளுக்கு இடையிலான பயண நேரத்தை குறைக்கும் நோக்கிலும் நமோ பாரத் ஆர்ஆர்டிஎஸ் ரயில் சேவை அறிமுகம் செய்யப்பட்டது.

மீரட் மெட்ரோ: இந்தியாவின் அதிவேக மெட்ரோ ரயில் சேவையை மீரட் மெட்ரோ வழங்குகிறது. அதிகபட்சமாக மணிக்கு 130 கிலோமீட்டர் வேகம் வரை மீரட் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும். இந்தியாவிலேயே நமோ பாரத் ஆர்ஆர்டிஎஸ் ரயில், மெட்ரோ ரயில் என இரண்டும் ஒரே தடத்தில் பயணிக்கும் வகையில் மீரட் மெட்ரோ வடிவமைக்கப்பட்டுள்ளது. 23 கிலோமீட்டர் தூரம் கொண்ட இந்த மெட்ரோ தடத்தில் 13 ரயில் நிலையங்கள் உள்ளன. 30 நிமிடத்தில் பயண தூரத்தை மீரட் மெட்ரோ ரயில் சேவை நிறைவு செய்கிறது.



## சென்னை பெரம்பூரில் விஜய் போட்டியிட தவெக தீர்மானம்!

சென்னை, பிப்.23-

எதிர்வரும் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் சென்னையில் உள்ள பெரம்பூர் தொகுதியில் தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய் போட்டியிட வேண்டும் என்று சென்னையில் நடைபெற்ற அக்கட்சி நிர்வாகிகள் பங்கேற்ற செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதில் பேசிய தவெக தேர்தல் பிரச்சார மேலாண்மை பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா கூறியதாவது: “சென்னை துறைமுகம் பகுதியில் நாம் அமைதியான முறையில் பிரச்சாரம் மேற்கொண்டோம். வீடு வீடாக அந்த பிரச்சாரப் பணி நடைபெற்றது. அப்போது நமது கர்ப்பிணி சகோதரி ஒருவரின் வயிற்றில் கை வைத்தார்கள். அப்போதே நம் தலைவர் முடிவு செய்து விட்டார், நாம் முதலில் இறங்க வேண்டியது வடசென்னையில்தான் என்று.

வடசென்னை மீது ஒரு தவறான கண்ணோட்டத்தை திமுக உருவாக்கி வைத்துள்ளது. இங்குள்ள மக்கள் அன்பானவர்கள். அனைவரும் உழைப்பாளிகள். அதை நாம் அறிவோம். இந்த நேரத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என கருதுகிறேன்.

வடசென்னையை வளர்ச்சி பாதைக்கு நம் தலைவர் அழைத்துச் செல்வார். வளர்ச்சியை மட்டுமே அவர் உருவாக்குவார். நிச்சயம் அவரது மனம் வடசென்னையை நோக்கிதான் உள்ளது என நான் கணிக்கிறேன். \

ஏனென்றால், வட சென்னையை இந்த 50 முதல் 60 ஆண்டுகளாக ‘ஒதுக்கி, ஒதுக்கி’ வைத்த திமுகவின் சூழ்ச்சியை தூக்கி அடிக்கும் திறன் கொண்ட ஒரே தலைவர் நம் தலைவர்தான். சென்னை பெரம்பூர் தொகுதியில் நம் தலைவர் போட்டியிட வேண்டும் என தீர்மானத்தை இந்த கூட்டத்தில் முன்மொழிகிறேன். இதை பொதுச்செயலாளர் வழிமொழிய வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் 234 தொகுதிகளில் தவெக வேட்பாளராக யார் போட்டியிட்டாலும் சரி, அது நம் தலைவர்தான் என நாம் கருத வேண்டும். ஏனெனில், நம் தலைவரை முதல்வராக பொறுப்பேற்க செய்ய வேண்டும். சென்னையில் உள்ள அனைத்து தொகுதிகளையும் நாம் வெல்ல வேண்டும். சென்னை, திமுகவின் கோட்டை என்று சொல்கிறார்கள். அதை நாம் உடைக்க வேண்டும்” என்றார்.

தொடர்ந்து ஆனந்த் பேசுகையில், “ஆதவ் முன்வைத்த தீர்மானத்தை நாங்கள் எல்லாரும் மனதார ஏற்றுக்கொள்கிறோம். உங்களுடைய விருப்பத்தை தளபதியிடம் சொல்வோம்.” என்றார்.

## ஏப்.1 முதல் சுங்கச்சாவடிகளில் பணமாக செலுத்த முடியாது

புதுடெல்லி, பிப்.23-

தேசிய நெடுஞ்சாலையில் உள்ள சுங்கச்சாவடிகளில் வாகன ஓட்டிகள் ரொக்கப் பணம், ஃபாஸ்டேக் போன்ற முறையில் கட்டணத்தை செலுத்தி வருகின்றனர். இனிமேல் பயணிகள் சுங்கச்சாவடிகளில் ஃபாஸ்டேக் அல்லது யு.பி.ஐ. போன்ற டிஜிட்டல் முறைகளை மட்டுமே பயன்படுத்த முடியும். இந்தத் திட்டம் வரும் ஏப்ரல் 1ம் தேதி முதல் இது அமலுக்கு வரும் என தெரிகிறது.

தற்போது 98 சதவீதத்துக்கும் அதிகமான வாகன ஓட்டிகள் ஃபாஸ்டேக் முறையைப் பயன்படுத்தினாலும், ஒரு சில வாகன ஓட்டிகள் இன்னும் சுங்கக்கட்டணத்தைப் பணமாகவே செலுத்துகின்றனர். இதனால் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.எனவே, முழுமையான டிஜிட்டல் பரிவர்த்தனை முறையை அமல்படுத்த தேசிய நெடுஞ்சாலை ஆணையம் முடிவெடுத்துள்ளது..

## இந்திய அமெரிக்க வர்த்தக ஒப்பந்தப் பேச்சுவார்த்தை ஒத்திவைப்பு நிலவரம் என்ன?


டெல்லி, பிப்.23-

அமெரிக்க உச்ச நீதிமன்ற தீர்ப்பின் எதிரொலியாக, அந்நாட்டுடன் வாஷிங்டனில் நடைபெற இருந்த வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தையை இந்தியா ஒத்தி வைத்துள்ளது.

இந்தியா அமெரிக்கா இடையே இடையே மார்ச் மாதம் வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. இதற்கு முன்னோட்டமாக இந்திய பிரதிநிதிகளுக்கும், அமெரிக்க பிரதிநிதிகளுக்கும் இடையே வாஷிங்டனில் நாளை பேச்சுவார்த்தை நடைபெற இருந்தது.

இந்த நிலையில், அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பின் 15 சதவீத கூடுதல் வரிவிதிப்பு காரண மாக தற்போது குழப்பமான சூழல் நீடிக்கிறது. குறிப்பாக, இந்திய பொருட்களுக்கு எவ்வளவு வரி விதிக்கப்படும் என்பது தொடர்பாக அமெரிக்க அரசு அதிகாரப்பூர்வமாக எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை.

இதன் எதிரொலியால், இந்தியா அமெரிக்கா இடையே நாளை நடைபெற இருந்த வர்த்தக ஒப்பந்த



பேச்சுவார்த்தை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இருதரப்பு பேச்சுவார்த்தைக்கான புதிய தேதி பின்னர் முடிவு செய்யப்படும் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

முன்னதாக, கடந்த ஆண்டு ஏப்ரலில் சுமார் 100க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான புதிய வரி விதிதங்களை அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்தார். இதுதொடர்பான வழக்கை விசாரித்த அந்த நாட்டு உச்ச நீதிமன்றம், புதிய வரி விகிதங்களை அண்மையில் ரத்து செய்தது.

இதைத் தொடர்ந்து இந்தியா உட்பட அனைத்து நாடுகளுக்கும் கூடுதலாக 10 சதவீத வரி விதிக்கப்படும் என்று அதிபர் ட்ரம்ப் அறிவித்தார். அடுத்த சில மணி நேரத்தில் வரி விகிதம் 15 சதவீதமாக உயர்த்தப்படுகிறது என்று அவர் உத்தரவிட்டார். அமெரிக்க அரசின் புதிய வரி விகிதம் நாளை முதல் அமலுக்கு வருகிறது.

கடந்த ஆண்டு அதிபர் ட்ரம்ப் அமல்படுத்திய வரி விதிப்புக்கு முன்பாக இந்திய பொருட்களுக்கு அமெரிக்க அரசு 10 சதவீத வரியை விதித்திருந்தது. எனினும் அமெரிக்காவுக்கு மிகவும் விருப்பமான நாடு என்ற அந்தஸ்து காரணமாக இந்திய பொருட்களுக்கு 3.5 சதவீத வரி மட்டுமே விதிக்கப்பட்டு வந்தது.

இந்தச் சூழலில் கடந்த ஆண்டு ஆகஸ்டில் இந்திய பொருட்களுக்கு 25 சதவீத வரியை அமெரிக்க அரசு விதித்தது. ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் வாங்குவதாக குற்றம் சாட்டி மேலும் 25 சதவீத வரி விதிக்கப்பட்டது. ஒட்டுமொத்தமாக இந்திய பொருட்களுக்கு 50 சதவீத வரி விதிக்கப்பட்டது.

இந்த மாத தொடக்கத்தில் பிரதமர் நரேந்திர மோடியும், அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்பும் தொலைபேசியில் பேச்சுவார்த்தை நடத்தினர். இதில் சுமுக உடன்பாடு எட்டப்பட்டது. இதைத் தொடர்ந்து இந்திய பொருட்கள் மீதான வரி 18 சதவீதமாகக் குறைக்கப்படும் என்று அதிபர் ட்ரம்ப் அறிவித்தார்.

இந்நிலையில், ‘அமெரிக்க உச்ச நீதிமன்ற தீர்ப்பைத் தொடர்ந்து, இந்தியா உட்பட அனைத்து நாடுகளுக்கும் 15 சதவீத கூடுதல் வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார். தனது சிறப்பு அதிகாரத்தை பயன்படுத்தி அவர் இந்த உத்தரவை பிறப்பித்திருக்கிறார். இது, 150 நாட்கள் மட்டுமே அமலில் இருக்கும். அமெரிக்க நாடாளுமன்றத்தின் ஒப்புதல் கிடைத்தால் மட்டுமே 15 சதவீத கூடுதல் வரியை தொடர்ந்து அமல்படுத்த முடியும்.

தற்போதைய சூழலில் இந்திய பொருட்களுக்கு பழைய வரி 3.5 சதவீதம், புதிய வரி 15 சதவீதம் என 18.5 சதவீத வரி விதிக்கப்படலாம். இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் ஸ்மார்ட்போன்கள், மருந்துகளுக்கு அமெரிக்க அரசு ஏற்கெனவே வரி விலக்கு அளித்திருக்கிறது.

இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் 40 சதவீத பொருட்களுக்கு வரி விதிக்கப்படாது. மீதமுள்ள 60 சதவீத பொருட்களுக்கு 18.5 சதவீத வரி விதிக்கப்படலாம்’ என மத்திய அரசு வட்டாரங்கள் கூறுகின்றன.

## சென்னை ஐஐடியில் பிஎஸ் மேலாண்மை, தரவு அறிவியல் பட்டப்படிப்பு அறிமுகம்

சென்னை, பிப்.23-

பிஎஸ் மேலாண்மை மற்றும் தரவு அறிவியல் எனும் 4 ஆண்டு இளநிலை அறிவியல் பட்டப் படிப்பை, சென்னை ஐஐடி அறிமுகப்படுத்தியுள்ளது.

புதிய பட்டப் படிப்புகள் தொடர் பான அறிமுக நிகழ்ச்சி சென்னை ஐஐடி வளாகத்தில் நேற்று நடைபெற்றது. அதன் பின்னர், சென்னை ஐஐடி இயக்குநர் வீ.காம கோடி செய்தியாளர்களிடம் கூறியதாவது: சென்னை ஐஐடி சார்பில் ஏற்கனவே தரவு அறிவியல், எலக்ட்ரானிக் சிஸ்டம்ஸ், ஏரோனாட்டிக்ஸ் ஸ்பேஸ் டெக் ஆகிய 3 பிஎஸ் இளநிலை அறிவியல் படிப்புகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. தற்போது 4வதாக மேலாண்மை மற்றும் தரவு அறிவியல் எனும் 4 ஆண்டு இளநிலை அறிவியல் படிப்பை அறிமுகப் படுத்துகிறோம்.

இந்த பிஎஸ் படிப்பில் சேருவோரை வணிக ரீதியாக முடிவெடுத்தல், சிந்தித்து திட்டமிடல், தரவு சார்ந்த சிக்கல்களை தீர்க்கும் திறன் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெறச் செய்யும் வகையில் பாடத் திட்டம் வடிவமைக்கப் பட்டுள்ளது. இந்த பாடத்திட்டத்தில் படித்து தேர்ச்சி பெறுவோருக்கு ஐஐடியின் இளநிலை அறிவியல் பட்டம் வழங்கப்படும். இது ஐஐடி வழங்கும் இதர இளநிலைப் பட்டங்களுக்கு நிகரான அங்கீகாரத்தைக் கொண்டிருக்கும்.

பிளஸ் 2 வகுப்பு அல்லது அதற்கு சமமான கல்வித் தகுதியுள்ள டிப்ளமோ முடித்தவர்கள் உட்பட எவரும் இப்படிப்பில் சேரலாம். இதை தனிபட்டப் படிப்பாகவோ அல்லது வேறு கல்வித் திட்டத்துடன் இணைந்தோ அல்லது பணியில் இருந்து கொண்டே தொடரலாம். தகுதித் தேர்வு மூலமாகவோ அல்லது ஜேஇஇ பிரதானத் தேர்வில் கலந்துக் கொள்ளும் தகுதியைப் பெறுவதன் மூலமாகவோ இந்த படிப்பில் சேர்க்கப்படுகிறார்கள்.

இதன் வகுப்புகள் ஜூன் மாதம் தொடங்கும். இதற்கு மே 31ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம். இந்த புதிய பிஎஸ் படிப்புக்கான பாடத்திட்டம், மாணவர் சேர்க்கை விவரங்களை ஐஐடி இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்வில், ஃபோர்டு மோட் டார் நிறுவனத்தின் இந்தியா பிரிவுத் தலைவர் கங்கப்ரியா சக்ரவர்த்தி, சுந்தரம் ஃபைனான்ஸ் லிமிடெட் நிர்வாக இயக்குநர் ராஜீவ் சி.லோச்சன், சென்னை ஐஐடி மேலாண்மைக் கல்வித் துறை தலைவர் சஜி மேத்யூ உள்ளிட்டோர் கலந்துக் கொண்டனர்.

# பொள்ளாச்சி புதிய பேருந்து நிலையத்தை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்



பொள்ளாச்சி, பிப்.23-

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கோவை மாவட்ட நகராட்சி நிர்வாக துறையின் சார்பில், பொள்ளாச்சி சி.டி.சி மேடு பகுதியில் ரூ. 9.83 கோடி மதிப்பில் கட்டப்பட்ட புதிய பேருந்து நிலையம், மேலும் ஊரக வளர்ச்சித்துறை சார்பில், ரூ. 72.10 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட துணை சுகாதார மையம், அங்கன்வாடி மையம் மற்றும் நியாய விலை கடைகளை திறந்து வைத்தார்.

பொள்ளாச்சி நகராட்சி கோயம்புத்தூர் சாலை மற்றும் பல்லடம் சாலையை இணைக்கும் புதிய திட்ட சாலைக்கு, 'அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம் சாலை' என பெயர் சூட்ட ஆணையிட்டு கடந்த 12.02.2026 அன்று அரசாணை வெளியீட்டின் அடிப்படையில் மக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் அலுவலகம் போன்ற பல்வேறு அரசு நலத்திட்ட பணிகளை துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் அமைச்சர் மு. சாமிநாதன், அமைச்சர் அர. சக்கரபாணி, முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி கோவை மாவட்ட ஆட்சியர் பவன் குமார், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வர சாமி, பொள்ளாச்சி நகர மன்ற தலைவர் ஷ்யாமளா நவநீதகிருஷ்ணன் பொள்ளாச்சி நகராட்சி ஆணையர் குமரன் மற்றும் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# மார்த்தாண்டத்தில் போதை கலாச்சாரத்தை கண்டித்து பாஜ கூட்டணி ஆர்ப்பாட்டம்



மார்த்தாண்டம், பிப்.23-

கன்னியாகுமரி ஒருங்கிணைந்த மாவட்ட பாஜக இளைஞர் அணி சார்பில் மார்த்தாண்டம் பேருந்து நிலையம் அருகே சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளுக்கு காரணமான போதை கலாச்சாரத்தை கண்டித்தும், நடவடிக்கை எடுக்க தவறிய திமுக அரசை கண்டித்தும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மேற்கு மாவட்ட இளைஞர் அணி தலைவர் சுஜின் மற்றும் கிழக்கு மாவட்ட இளைஞர் அணி தலைவர் அஸ்வின் தலைமையில் நடைபெற்ற இந்த போராட்டத்தில் தேசிய செயற்குழு உறுப்பினர் உமாரதி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார் பாஜக கிழக்கு மேற்கு மாவட்ட தலைவர்கள் ஆர் டி சுரேஷ், கோபகுமார், அதிமுக மேற்கு மாவட்ட செயலாளர் ஜெயசுதர்சன், தமிழ் மாநில காங்கிரஸ் மாநில செயலாளர் உட்பட தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சியை சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர். போராட்டத்தில் பங்கேற்றவர்கள் போதைக்கு எதிராக திமுக அரசு நடவடிக்கை எடுக்காததால் ஏற்பட்டு உள்ள பாதிப்புகளை பற்றி பேசியதோடு மக்கள் திமுக ஆட்சி மீது வெறுப்பில் உள்ளதால் 2026 ஆட்சி மாற்றம் நிச்சயம் என்று பேசினார்கள்.

# ஜோய்ஆலுக்காஸ் பிரில்லியன்ஸ் டைமண்ட் ஜுவல்லரி ஷோ பிப்ரவரி 21 முதல் மார்ச் 8 வரை வேலூரில் நடைபெறுகிறது



வேலூர் பிப். 23-

உலகின் ஃபேவரிட் ஜுவல்லர் ஜோய்ஆலுக்காஸ், பிப்ரவரி 21, 2026 முதல் வேலூர் ஷோரூமில் நடத்தும் தனது 'பிரில்லியன்ஸ் டைமண்ட் ஜுவல்லரி ஷோ வாயிலாக தமிழ்நாட்டை வைர அழகில் மின்னச் செய்திட தயாராகி வருகிறது. மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்த கண்காட்சி, வைர நகைகளில் கைவினைத்திறன், நேர்த்தி மற்றும் புதுமையின் அனுபவத்தை இணைக்கும் மறக்க முடியாத ஒரு கொண்டாட்டத்தை தனது வாடிக்கையாளர்களுக்கு சமர்ப்பிக்கிறது.

அற்புதமான பிரைடல் கலெக்ஷன்கள் முதல் சமகால படைப்புகள், காலத்தால் அழியாத பாரம்பரியத்தை நவீன அழகியலுடன் இணைக்கும் படைப்புகள் வரை இந்த கண்காட்சியில் இடம்பெறுகின்றன. காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வடிவமைப்பும் ஒரு தலைசிறந்த படைப்பு! கண்காட்சி காலத்தில் மட்டுமே இந்த வைர நகைகள் கிடைக்கும்.

ஜோய்ஆலுக்காஸ் குழுமத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் டாக்டர். ஜோய் ஆலுக்காஸ் குறிப்பிட்டதாவது 'பிரில்லியன்ஸ் டைமண்ட் ஜுவல்லரி ஷோ வைரங்களின் நீடித்த வசீகரத்திற்கும், நகை வடிவமைப்பில் முழுமைக்கான எங்கள் அடையாளத்திற்கும் உள்ள தொடர்பை விவரிக்கும் நிகழ்ச்சி. வேலூர் மாநகரம் எங்கள் இதயத்தில் ஒரு சிறப்பு இடத்தைப் பிடித்துள்ளது. பண்டிகை காலத்தில் நடைபெறும் இந்த கண்காட்சி வாடிக்கையாளர்களுக்கு அழகான, தனித்தத்துவம் வாய்ந்த, கைவினைத் திறனை சிறந்த முறையில் பிரதிபலிக்கும் நகைகளின் டிசைன்களை கண்டறிய ஒரு பிரத்யேக வாய்ப்பை வழங்கும்' என்று தெரிவித்தார்.

இந்த கண்காட்சியை சிறப்பிக்கும் வகையில், கண்காட்சி காலத்தில் ₹1 லட்சம் மற்றும் அதற்கு மேலுள்ள ஒவ்வொரு வைர நகை பர்ச்சேஸ்க்கும் வாடிக்கையாளர்கள் ஒரு இலவச தங்க நாணயத்தைப் பெறுவார்கள், இது ஷாப்பிங் அனுபவத்திற்கு மேலும் சிறப்பைச் சேர்க்கும்.

'பிரில்லியன்ஸ் டைமண்ட் ஜுவல்லரி ஷோ' வேலூர் ஜோய்ஆலுக்காஸ் ஷோரூமில் மார்ச் 8, 2026 வரை பிரத்தியேகமாக நடைபெறும். ஒவ்வொரு ஆபரண தயாரிப்பும் ஆடம்பரம், காதல் மற்றும் காலத்தால் அழியாத வசீகரத்தின் கதையைச் உங்களுக்குச் சொல்வது உறுதி. வைரங்களின் அழகிய உலகத்தை நீங்கள் உணர்ந்து உவகைகொள்ள தங்களை வரவேற்கிறேன்.

# திருப்பூரில் சமூக மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் மஸ்ஜிதே இக்லாஸ் பள்ளிவாசல் ஜமாத்தார்கள் 15 வேலம்பாளையம் ஸ்ரீ ஊருடையம்மாள் கோவில் கும்பாபிஷேக விழாவுக்கு 11 சில்வர் தட்டுகளில் சீர்வரிசை வழங்கி வாழ்த்துக்கள் தெரிவித்த இஸ்லாமியர்கள்



திருப்பூர்:பிப். 23-

திருப்பூர் 15 வேலம்பாளையம் பகுதியில் தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய துறைக்கு சொந்தமான அருள்மிகு ஸ்ரீ ஊருடையம்மன், ஸ்ரீ விநாயகர் திருக்கோவில் மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது. இந்த கோவில் கும்பாபிஷேக அழைப்பிதழ் முக்கிய விருந்தினர்கள் உட்பட அனைத்து பக்தர்களுக்கும் அனுப்பிய நிலையில் கோவில் கமிட்டியினர் சமூக மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் 15 வேலம்பாளையம் பகுதியில் செயல்பட்டு வரும் மஸ்ஜிதே இக்லாஸ் பள்ளிவாசல் மற்றும் மதரசா ஜமாத்தார்களை விழாவில் கலந்து கொள்ள நேரில் அழைப்பு விடுத்தனர். இதனைத் தொடர்ந்து 15 வேலம்பாளையம் பகுதியில் செயல்பட்டு வரும் மஸ்ஜிதே இக்லாஸ் பள்ளிவாசல் மற்றும் மதரசா ஜமாத்தார்கள் சார்பில் சமூக மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் பள்ளிவாசலின் தலைவர். அப்துல் சமது, தலைமையில் 50க்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் பள்ளிவாசலில் இருந்து 11 சில்வர் தட்டுகளில் சீர்வரிசையாக மாலைகள், பழவகைகள், தேங்காய், இனிப்பு வகைகள், வெற்றிலை சந்தனத்துடன் ஊர்வலமாக ஒரு கிலோமீட்டர் தூரம் ஊர்வலமாகச் சென்று 15 வேலம்பாளையம் பகுதியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீ ஊருடையம்மன் கோவிலுக்கு சென்று கும்பாபிஷேக விழா சிறப்பாக நடைபெறுவதற்கு சீர்வரிசைகளை கோவில் நிர்வாகிகளிடம் வழங்கினர். அதனைத் தொடர்ந்து இஸ்லாமியர்களை மாலை அணிவித்து வரவேற்பு கொடுத்த கோவில் நிர்வாக கமிட்டியினர் இஸ்லாமியர்களுக்கு கோவிலை சுற்றி காண்பித்து பின்னர் இருதரப்பினரும் பரஸ்பரமாக கைகளை குலுக்கி வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர். மேலும் கும்பாபிஷேக குடமுழுக்கு விழாவிற்கு இஸ்லாமியர்கள் சீர்வரிசையுடன் கோவிலுக்கு ஊர்வலமாக வந்து வழங்கிய நிகழ்வு அப்பகுதி மக்களிடையே நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிகழ்வில் மஸ்ஜிதே இக்லாஸ் பள்ளிவாசலின் செயலாளர். முகமது ரஃபீக், பொருளாளர். சித்தீக், திருப்பூர் மாநகராட்சி முதலாவது மண்டல தலைவர். உமா மகேஸ்வரி வெங்கடாசலம், அறங்காவலர் குழு தலைவர் முத்துராமன், இன்ஜினியர் ஜெயபாலன், வார்டு செயலாளர் செந்தில்குமார், ஈஸ்வரமூர்த்தி, மற்றும் கோவில் சிவாச்சாரியார்கள் இஸ்லாமியர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# குமரி விவசாய மற்றும் மீனவர் சங்கங்கள் போராட்ட அறிவிப்பு பேச்சுவார்த்தைக்கு அழைத்த போலீசார்

நாகர்கோவில், பிப். 23-

கன்னியாகுமரி மாவட்ட விவசாய சங்கங்கள் மற்றும் மீனவர் சங்கங்கள் இணைந்து தமிழக முதல்வர் குமரி மாவட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தரும் 25 ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள வேளாண்துறை இணை இயக்குனர் அலுவலகம் முன்பு போராட்டம் என அறிவித்து இருந்தனர்.

இது தொடர்பாக பாசனத்துறை சேர்மன் வழக்கறிஞர் வின்ஸ் ஆன்றோ, மற்றும் மீனவர் சங்கங்களின் சார்பாக சஹஹார் பாரதி அமைப்பின் தலைவர் சகாயம் ஆகியோரை நாகர்கோவில் துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் முன்னிலையில் பேச்சுவார்த்தைக்கு 21ம் தேதி மாலை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தினர். பேச்சுவார்த்தையில் முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை. இந்த நிலையில் இன்று திங்கள்கிழமை 23ஆம் தேதி சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் பேசி தகவல் தெரிவிப்பதாகவும் இன்று மீண்டும் பேச்சு வார்த்தை நடைபெறும் என்றும் தகவல்கள் வெளியாகி உள்ளது.

# புதுக்கடை அருகே பைக்கில் மோதிய ஆட்டோ 8 வயது சிறுவன் உட்பட 3 பேர் படுகாயம்

புதுக்கடை, பிப். 23 -

குழித்துறை பகுதி கழுவன்திட்டை ஆர் சி தெருவை சேர்ந்தவர் ரஜினி என்பவர் மகன் ரோகித் (20). பட்டதாரியான இவர் நேற்று தனது அண்ணன் மகன் ஜெபின் என்பவரை பின்னால் அமர வைத்து புதுக்கடை அருகே உள்ள ஐரேனிபுரம் சடையன் குழி சாலையில் சென்று கொண்டிருந்தார். சானல்முக்கு என்ற பகுதியில் வரும் போது, எதிரில் வந்த பயணிகள் ஆட்டோ ஒன்று மீது பைக்கை மீது மோதியது. பைக்கை மணிகண்டன் என்பவர் ஓட்டினார். அதில் 4 பயணிகள் காணப்பட்டனர்.

இதில் ஆட்டோவில் பயணம் செய்த முழங்குழி பகுதியைச் சேர்ந்த சுவாமிநாதன் (75) அவரது பேரன் நிதிஷ்வன் (8) ஆகியோர் படுகாயம் அடைந்தனர். மேலும் ஆட்டோ டிரைவர் மணிகண்டன் என்பவருக்கும் பலத்த காயங்கள் ஏற்பட்டது. பைக்கில் பயணம் செய்த வர்களுக்கும், ஆட்டோவில் பயணித்த மற்ற 2 பேருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை. காயமடைந்த. 3 பேர்கள் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு சிகிச்சை பெற்று வருகிறார்கள். இது குறித்த ரோகித் அளித்த புகாரின் பேரில் புதுக்கடை போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# புதுக்கடை அருகே26 மதுபான பாட்டில்கள் பறிமுதல்

புதுக்கடை, பிப்.23-

புதுக்கடை போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் கார்த்திக் தலைமையிலான போலீசார் நேற்று காப்புக்காடு சந்திப்பு பகுதியில் சோதனையில் ஈடுபட்டனர். அப்போது சந்திப்பு பகுதியில் சந்தேகத்திற்கிடமான வகையில் நின்ற கிருஷ்ண ராஜன் (56) என்பவரை பிடித்து விசாரித்து சோதனையிட்ட போது, அவரிடத்தில் எந்தவித அனுமதி இல்லாமல் அதிக விலைக்கு விற்பதற்காக பதுக்கிய 26 மது பாட்டில்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. போலீசார் மது பாட்டில்களை பறிமுதல் செய்து கிருஷ்ணராஜனை கைது செய்தனர்.

# குவளைக் கண்ணி நியாய விலை கடைகலையரங்கம் திறப்பு

## டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏகேஎஸ் விஜயன், எம்பி ராணி ஸ்ரீகுமார், எம்எல்ஏ ராஜா பங்கேற்பு



சங்கரன்கோவில். பிப்.23-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருகே உள்ள குவளைகண்ணி கிராமத்தில் மாவட்ட கவுன்சிலர் நிதியில் இருந்து ரூபாய் 8 லட்சம் மதிப்பீட்டில் கலையரங்கம் மற்றும் மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் ரூபாய் 12 .67 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலை கடை மற்றும் சின்ன ஒப்பனையாள்புரம் கிராமத்தில் ரூபாய் 6 லட்சம் மதிப்பீட்டில் சுகாதார வளாகம் ஆகியன கட்டி முடிக்கப்பட்டு திறந்து வைக்கும் நிகழ்ச்சி நடந்தது. தென்காசி எம்பி ராணி ஸ்ரீ குமார் மற்றும் திமுக தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ முன்னிலையில் திமுக மாநில விவசாய அணி செயலாளரும், தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியுமான ஏ கே எஸ் விஜயன் கலந்து கொண்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் சங்கரன்கோவில் யூனியன் சேர்மன் லாலாசங்கரபாண்டியன், மாவட்ட பொருளாளர் சரவணன், மாவட்ட கவுன்சிலர் மதி மாரிமுத்து, மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் குவளைக்கண்ணி பஞ்சாயத்து தலைவர் தினேஷ், தலைமை பொதுக்குழு உறுப்பினர் தேவா என்று தேவதாஸ், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் பிரபாவதி, முன்னாள் மாவட்ட கவுன்சிலர் சண்முகத்தாய், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் ராசையா ஒன்றிய துணைச் செயலாளர் மாரியப்பன், மாவட்ட பிரதிநிதி அழகையா, ஊர் நாட்டாமைகள் பால்ராஜ், மாடசாமி, மாரியப்பன் மற்றும் ஊர் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# நந்தா பொறியியல் கல்லூரியில் தொழில்நுட்ப கலாச்சார விழா




ஈரோடு, பிப். 23-

ஈரோடு நந்தா பொறியியல் கல்லூரியின் வெள்ளி விழா ஆண்டினை முன்னிட்டு மாணவர்களின் கல்வி, ஆராய்ச்சி, கலை திறமைகளை வெளிக்கொணரும வகையில் இரண்டு நாட்கள் தொழில்நுட்ப கலாச்சார விழா 'கருடா 26' என்ற தலைப்பில் தொடங்கியது. விழாவை நந்தா கல்வி அறக்கட்டளை தலைவர் சண்முகன் தலைமை தாங்கினார். விழாவினை அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார். நந்தா கல்வி அறக்கட்டளையின் இணை நிர்வாக அறங்காவலர்களான நந்தகுமார் பிரதீப், திருமூர்த்தி, கல்லூரி முதல்வர் ரகுபதி மற்றும் நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அலுவலர் வேலுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். முதல் நாள் நிகழ்ச்சியானது, ஈரோடு நந்தா பொறியியல் கல்லூரியின் இடைநிலை ஆராய்ச்சி மையம் மற்றும் இந்திய கல்வி அமைச்சகத்தின் நிறுவனங்களின் கண்டுபிடிப்பு மன்றம் சார்பில் மாணவர்களின் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப புதிய கண்டுபிடிப்புகளின் தகவல்கள் பகீர்தலுக்கான தொடர்ச்சியாக 24 மணி நேரம் கொண்ட 'மெக்கத்தான் 26' போட்டி நடந்தது. இதில், பொறியியல் மற்றும் தொழில்நுட்ப தகவல்களை பகீர்தலுக்காக உருவாக்கம் செய்யப்பட்ட கணினி, மின்னியல் மற்றும் மின்னணுவியல், மின்னியல் மற்றும் மின்னணுவியல் இல்லாத துறைகள் என 120 மாணவர்கள் கொண்ட 30 குழுக்கள் புதிய கண்டுப்பிடிப்புகளை உருவாக்க உள்ளனர். தொழில்நுட்ப தகவல்கள், யோசனைகள், மற்றும் தீர்வுகள் பகீர்தலுக்காக காட்சிப்படுத்தப்பட்ட புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கிய மாணவர் குழுக்களுடன் கோவை க்யூ.பி.ஒ.டி. ஆட்டோமேஷன் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் அப்துல் ராப் ஹனிபா, பெங்களூரு ஏ.பி.பி க்ளோபல் இன்டஸ்டீரிஸ் நிறுவனத்தின் தரவு அறிவியல் நிபுணர் அபிசேக் பாடேஜ், ஈரோடு ப்ரோவசுர் சாப்ட்வேர் டெக்னாலஜிஸ் நிறுவனத்தின் தலைவர் விஜயகுமார் ஆகியோர் சிறப்பு மதிப்பீட்டாளர்களாக கலந்து கொண்டு தொடர்ச்சியாக 24 மணி நேரம் ஆய்வினை மேற்கொண்டனர். இதேபோல, மாணவ மாணவிகளின் ரோபொ ரேஸ், குறும்படம் தயாரித்தல், பால்ஸ் இன்னோவா, கீரின் எனர்ஜி, சொல் விளையாட்டு போன்ற வெவ்வேறான போட்டிகள் ஒவ்வொரு துறையிலும் தனித்தனியே நடத்தப்பட்டன. இதில் மாநில அளவில் பல்வேறு பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளிலிருந்து சுமார் 1200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். முடிவில், ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி கவுரவிக்கப்பட்டனர். இதனைத்தொடாந்து மாலையில், இசை நிகழ்ச்சியின் பிரபல தொகுப்பாளர் மதன் டிஜே இசை நிகழ்ச்சி நடந்தது. இரண்டாம் நாளன்று, மாணவர்களின் ஆராய்ச்சி திறமையின் பயனாக உருவாக்கப்பட்ட பல்வேறு வகையான படைப்புகள் அடங்கிய கண்காட்சியினை தமிழ்நாடு ஸ்டார்ட் அப் இயக்கத்தின் பணி இயக்குனர் சிவராஜ ராமநாதன் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று ரிப்பன் வெட்டி துவக்கி வைத்து பார்வையிட்டார். மேலும், இத்திருவிழாவிற்கான ஏற்பாடுகளை நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் மாணவர்கள் நலன் துறை தலைவர் குணசேகர், பொறியியல் கல்லூரியின் மாணவர்களின் விவகார துறைத்தலைவர் மூர்த்தி ஆகியோர் செய்திருந்தனர்.


## 65 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய வகுப்பறைகளை சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் திறந்து வைத்தார்



வேலூர் பிப். 23- வேலூர் மாவட்டம் அணைக்கட்டு வட்டம் சத்தியமங்கலம் ஊராட்சியில் ராமாபுரம் அரசு நடுநிலைப்பள்ளியில் குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் (2024 25) கீழ் ரூபாய் 65 லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய வகுப்பறைகளை சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார் திறந்து வைத்தார். இதேபோன்று கிராம வறுமை ஒழிப்பு அலுவலகம் அருகில் இளைஞர்களுக்கான புதிய உடற்பயிற்சி கூடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

இதில் வேலூர் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, சத்தியமங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் பால்வேணி இளங்கோவன், பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் இளங்கோவன் அணைக்கட்டு மத்திய ஒன்றிய செயலாளர் பி.வெங்கடேசன் கிழக்கு ஒன்றிய செயலாளர் கோ.குமரபாண்டியன் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## தோவாளை அருகே சாலையில் கார் மோதி சாம்பார் மான் உயிரிழப்பு



நாகர்கோவில், பிப்.23 கன்னியாகுமரி வன உயிரின சரணாலயத்தின் பூதப்பாண்டி வனச்சரகம், ஆரல்வாய்மொழி பிரிவு அருகே (22.02.2026) காலை சுமார் 10.30 மணியளவில் சாலை விபத்தில் ஆண் சாம்பார் மான் ஒன்று உயிரிழந்தது.

தோவாளை ஸ்ரீ காவல்கிணறு தேசிய நெடுஞ்சாலை பகுதியில், தோவாளை அருகிலுள்ள ஒரு பெட்ரோல் பங்க் அருகே சாலையில் நேற்று காலையில் கார் ஒன்று சென்று கொண்டிருந்தது. அப்போது சாலையோர புதரில் இருந்து திடீரென ஒரு சாம்பார் மான் (மிளா ) காரின் மீது பாய்ந்தது. எதிர்பாராத இந்த மோதலில் காரின் முன் பகுதி மற்றும் கண்ணாடி பலத்த சேதம் அடைந்தது. இருப்பினும் காரில் பயணம் செய்தவர்களுக்கு எந்தவித காயமும் ஏற்படவில்லை. அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர். அவர்களை அப்பகுதியினர் மீட்டு முதலுதவி அளித்தனர்.

இந்த விபத்தில் சாம்பார் மான் உயிரிழந்தது. தகவல் கிடைத்தவுடன் வனத்துறை அதிகாரி அன்புமகன் தலைமையில் பூதப்பாண்டி அலுவலர் பாலசந்திரிகா, ஆரல்வாய்மொழி பிரிவு அலுவலர் முத்துராமலிங்கம், வனக்காப்பாளர் பிரபின், வன காவலர்கள் புஷ்பராஜ், சிவதணிகை வேலன், தடுப்பு வேட்டை காவலர் தனிஷ், மற்றும் பணியாளர்கள் உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்று ஆய்வு செய்து சாம்பார் மாமானின் உடலை மீட்டு, தோவாளை கால்நடை மருத்துவ அதிகாரி மூலம் பிரேதப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இது குறித்த விரிவான அறிக்கை பின்னர் சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அதிகாரிகள் கூறுகையில், சாலை வழியாக செல்லும் வாகன ஓட்டிகள் வனப்பகுதி அருகே மிதமான வேகத்தில் எச்சரிக்கையுடன் செல்லுமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.



சிவகங்கை மாவட்டத்திற்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக வருகை புரிந்த இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்களை மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, மலர்கொத்து வழங்கி வரவேற்றார்.

## தருமபுரி மாவட்ட மக்களுக்காக சட்டசபையில் குரல் கொடுத்த பாப்பிரெட்டிப்பட்டி எம்எல்ஏ கோவிந்தசாமிக்கு வணிகர்கள் நன்றி தெரிவித்தனர்



தருமபுரி பிப். 23- தருமபுரி நகரில் இருந்த புறநகர் பேருந்து நிலையத்தை கடந்த 5 ம் தேதி இடமாற்றம் செய்யப்பட்டது. இதனால் பொதுமக்கள், வணிகர்கள் என அனைத்து தரப்பினரும் பாதிக்கப்பட்டனர். பேருந்து நிலையம் மாற்றப்பட்டதற்கு கடும் எதிர்ப்புகள் அதிமுக மற்றும் கூட்டணி கட்சியினர் தெரிவித்தனர். இதனால் சில பேருந்துகள் மட்டும் பழைய புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து இயக்க மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது. இந்நிலையில் மேலும் உள்ள பேருந்துகளும் பழைய புறநகர் பேருந்து நிலையத்திலிருந்து இயக்க வேண்டுமென பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் கோவிந்தசாமி சட்டசபையில் கோரிக்கை வைத்தார். மக்களுக்காக குரல் கொடுத்த பாப்பி ரெட்டிப்பட்டி எம்எல்ஏ கோவிந்தசாமி, அம்மா பேரவை செயலாளர் எஸ்.ஆர்.வெற்றிவேல்,நகர செயலாளர் பூக்கடை ரவி ஆகியோரை வணிகர்கள் நேரில் சந்தித்து தங்கள் நன்றியை தெரிவித்தனர்.

## தென்காசியில் தமிழக வெற்றி கழகத்தின் பரப்புரைச் செயலாளர் நாஞ்சில் சம்பத் பத்திரிக்கையாளர் சந்திப்பு



தென்காசி, பிப்.23- தமிழக வெற்றி கழகத்தின் பரப்புரைச் செயலாளர் நாஞ்சில் சம்பத் தென்காசி மாவட்டத்தில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்பொழுது அவர் பேசியதாவது,

இந்திய துணைக் கண்டத்தில் 2 வல்லமை படைத்த கட்சிகளை வீழ்த்துவேன் என்ற ஆளுமை படைத்த ஒரே தலைவர் விஜய் தான் எனவும், விஜயின் அரசியலைப் பார்த்து தான் திமுக அரசியல் செய்கிறது, விஜயை காப்பி அடித்தால் தான் கரை சேர முடியும் என திமுகவினர் நம்புகிறார்கள்.

தமிழகத்தை கடன் சுமையிலும், போதையிலும் தள்ளிவிட்டு, சட்டம் ஒழுங்கு சீர்குலைந்த மாநிலமாக தமிழ்நாட்டை தள்ளி உள்ளது திமுக.


தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை சட்டப்பேரவை முடியும் நாளன்று சம்பிரதாயத்திற்காக ஓ.பன்னீர்செல்வம் சந்தித்திருக்கிறார். 3 முறையாக முதல்வராக இருந்த அவர் தன்னுடைய முடிவு குறித்து இன்னும் சிந்தித்துக் கொண்டிருப்பதாகவே தெரிகிறது வருகின்ற 24 ஆம் தேதி ஜெயலலிதா அம்மாவின் பிறந்தநாள் அன்று சசிகலா பசும்பொனில் புதிய கட்சி தொடங்குகிறார். அதில் ஓ.பன்னீர்செல்வம் இணைந்து பணியாற்ற வாய்ப்புள்ளதாக நம்புகிறேன் என அவர் கருத்து தெரிவித்தார். மேலும் அந்தப் புதிய கட்சியும் தமிழக வெற்றி கழகத்துடன் கூட்டணி அமைக்க வாய்ப்பு உள்ளது.

மேலும் முன்னாள் அமைச்சர் ராஜேந்திர பாலாஜியின் கருத்துக்கு, தான் கருத்து தெரிவிக்கும் அளவிற்கு தன்னுடைய தகுதி கீழே செல்லவில்லை எனவும், திமுக குறித்து முன்பு குற்றம் சாட்டிய மதிமுக தலைவர் வைகோ, தற்போது திமுக தான் ஆட்சிக்கு வரும் என கருத்து தெரிவித்தது தொடர்பான கேள்விக்கு பதில் அளித்த நாஞ்சில் சம்பத், எந்தப் பறவையும் முட்டைக்கு திரும்பிய சரித்திரம் இல்லை ஆனால் முட்டைக்கு திரும்பிய முட்டாள் பறவை வைகோ என கடுமையாக அவரை சாடினார். நகராட்சி நிர்வாக அமைச்சர் மீது வழக்குப்பதிவு செய்ய நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில் அவர் உடனடியாக அமைச்சர் பதவி ராஜினாமா செய்ய வேண்டும் எனவும் த.வெ.க கூட்டணிக்காக எந்த கட்சிகளையும் விலைக்கு வாங்க தயார் இல்லை எனவும் தனியாக நின்று வெல்ல முடியும் என்கின்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது.

த.வெ.கவுடன் கூட்டணி சேர வேண்டும் என்கின்ற தாகமும், தவிப்பும் சில கட்சிகளுக்கு உள்ளது. அவர்கள் எங்களுடன் விரைவில் கூட்டணி வைப்பார்கள். குறிப்பாக, மார்ச் 9ம் தேதி திருச்சியில் திமுக மிகப்பெரிய மாநாடு ஒன்றை நடத்துகிறது. அன்றைய தினம், தமிழக வெற்றி கழகத்தின் பொலிட்டிக்கல் பாம் வெடிக்கும். திமுகவுடன், காங்கிரஸ் கூட்டணி வைத்துள்ளதாக ராகுல் காந்தி ஒருபோதும் சொல்லவில்லையே, இப்பொழுது இருக்கிறோம், இனிமேலும் இருப்போம் என சொன்னார்களா? தமிழக வெற்றி கழகமும், காங்கிரசும் கூட்டணி அமைத்தால் 234 தொகுதியிலும் வெற்றி பெறுவோம்.

திமுகவுடன் தே.மு.தி.க கூட்டணி வைத்தது தொடர்பாக பேசிய நாஞ்சில் சம்பத் பழம் நழுவி பணம் கலந்த பாலில் விழுந்து விட்டதாக அவர் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது. பத்திரிக்கையாளர் சந்திப்பில் தமிழக வெற்றி கழகத்தின் தென்காசி மாவட்ட செயலாளர் ராஜபிரகாஷ் மற்றும் தமிழக வெற்றிக் கழகத்தின் முக்கிய நிர்வாகிகள் உறுப்பினர்கள் உடன் இருந்தனர்

## திருவெண்ணெய்நல்லூர் அருகே துலங்கம்பட்டு கிராமத்தில் அங்காளபரமேஸ்வரி கோயில் தேர் திருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது



திருவெண்ணெய் நல்லூர். பிப்.23- திருவெண்ணெய் நல்லூர் அருகே துலங்கம்பட்டு கிராமத்தில் பிரசித்தி பெற்ற ஸ்ரீஅங்காள பரமேஸ்வரி கோயில் தேர் திருவிழா நேற்று வெகு விமர்சையாக நடைபெற்றது. விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூரில் பிரசித்தி பெற்ற ஸ்ரீஅங்காளம்மன் கோயில் தேர் திருவிழா நேற்று முன் தினம் வெகு விமர்சையாக நடைபெற்றது. அதனை தொடர்ந்து அடுத்த நாள் திருவெண்ணெய்நல்லூர் அருகே துலங்கம்பட்டு கிராமத்தில் ஸ்ரீஅங்காள பரமேஸ்வரி கோயில் தேர்திருவிழா வெகு விமர்சையாக நடைபெறுவது வழக்கம். இந்நிலையில் இந்த ஆண்டுக்கான திருவிழா கடந்த 26ம் தேதி காப்பு கட்டி கொடியேற்றத்துடன் தொடங்கியது. 9 நாள் நடைபெறும் திருவிழாவில், ஒவ்வொரு நாளும் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்து வான வேடிக்கையுடன் வீதி உலா நடைபெற்று வந்தது. இதையடுத்து பிரசித்தி பெற்ற தேர் திருவிழா நேற்று வெகு விமர்சையாக நடைபெற்றது. அப்போது மலர்களால் அலங்கரிக்கப்பட்ட அங்காள பரமேஸ்வரி அம்மன் தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளித்தார். இதில் உளுந்தூர்பேட்டை எம்.எல்.ஏ, அ.ஜெ. மணிக்கண்ணன், திருவெண்ணெய்நல்லூர் கிழக்கு ஒன்றிய செயலாளரும், மாவட்ட கவுன்சிலருமான மா.சந்திரசேகரன் தேரை வடம் பிடித்து இழுத்து தொடங்கி வைத்தனர். அதனைத் தொடர்ந்து அங்கிருந்த பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்தனர். தேர் முக்கிய வீதிகள் வழியாக சென்று கோவிலை வந்தடைந்தது. விழாவில் துலங்கம்பட்டு, பெரியசெவலை, ஆமூர் திருவெண்ணெய்நல்லூர் உள்ளிட்ட சுற்றுவட்டார கிராமங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

## திருவெண்ணெய்நல்லூர் அருகே ஸ்ரீஅங்காளபரமேஸ்வரி கோயில் தேர் திருவிழா அ.ஜெ.மணிக்கண்ணன் எம்.எல்.ஏ., வடம் பிடித்து இழுத்து தொடங்கி வைத்தார்



திருவெண்ணெய் நல்லூர். பிப். 23- திருவெண்ணெய் நல்லூர் அருகே துலங்கம்பட்டு கிராமத்தில் பிரசித்தி பெற்ற ஸ்ரீஅங்காள பரமேஸ்வரி கோயில் தேர் திருவிழா நேற்று வெகு விமர்சையாக நடைபெற்றது. 9 நாட்கள் நடைபெறும் திருவிழாவில் ஒவ்வொரு நாளும் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்து வான வேடிக்கையுடன் வீதி உலா நடைபெற்று வந்தது. இதையடுத்து பிரசித்தி பெற்ற தேர் திருவிழா நேற்று வெகு விமர்சையாக நடைபெற்றது. அப்போது மலர்களால் அலங்கரிக்கப்பட்ட அங்காள பரமேஸ்வரி அம்மன் தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு காட்சியளித்தார். இதில் உளுந்தூர்பேட்டை எம்.எல்.ஏ, அ.ஜெ. மணிக்கண்ணன், திருவெண்ணெய்நல்லூர் கிழக்கு ஒன்றிய செயலாளரும், மாவட்ட கவுன்சிலருமான மா.சந்திரசேகரன் ஆகியோர் தேரை வடம் பிடித்து இழுத்து தொடங்கி வைத்தனர். அதனைத் தொடர்ந்து அங்கிருந்த பக்தர்கள் தேரை வடம் பிடித்து இழுத்தனர். தேர் முக்கிய வீதிகள் வழியாக சென்று கோவிலை வந்தடைந்தது. விழாவில் துலங்கம்பட்டு, பெரியசெவலை, ஆமூர் திருவெண்ணெய்நல்லூர் உள்ளிட்ட சுற்றுவட்டார கிராமங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர்.

## குமரியில் தமிழக முதலமைச்சர் 2 நாள் சுற்றுப்பயணம் 2500 போலீசார் பாதுகாப்பு விழா மைதானத்தில் எஸ்பி ஸ்டாலின் ஆய்வு





நாகர்கோவில், பிப். 23- தமிழக முதலமைச்சர் மு க ஸ்டாலின் பிப்ரவரி 24 மற்றும் 25 ஆகிய தேதிகளில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள், அரசு விழாக்களில் பங்கேற்க இருக்கிறார். இதையொட்டி நாகர்கோவில் கன்கார்டியா மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் விழா நடைபெறுகிறது. மாவட்ட போலீஸ் எஸ்பி ஸ்டாலின் நேற்று நேரில் சென்று மைதானத்தை ஆய்வு மேற்கொண்டனர். அப்போது விழா நடைபெறும் மைதானத்தில் அவசர கால வெளியேற்ற பகுதிகள், பயனாளிகள் வந்து செல்லும் பாதை போன்றவற்றை எஸ்பி நேரில் ஆய்வு செய்தார்.

முதலமைச்சர் 25ம் தேதி ஆயிரக்கணக்கான பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கும் பிரம்மாண்ட மேடை மற்றும் பொதுமக்கள் அனைவரும் அமரும் பந்தல் போன்றவைகளும் அமைக்கப்பட்டுள்ளது. அவற்றையும் எஸ் பி பார்வையிட்டு அதிகாரிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.

மேலும் விழா நாட்களில் மாவட்டத்தில் போக்குவரத்து நெரிசல் ஏற்படாத வண்ணம் மாற்று பாதையில் வாகனங்கள் செல்வது குறித்தும் ஆய்வுகள் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் சிசிடிவி கேமரா கண்காணிப்பு மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் அவர் உறுதிப்படுத்தினார்.

முதலமைச்சர் வருகை முன்னிட்டு மாவட்ட முழுவதும் ஐந்து அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மாவட்ட எஸ் பி ஸ்டாலின் தலைமையில் சுமார் 2500 போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதற்காக நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, விருதுநகர் உள்ளிட்ட தென் மாவட்டங்களில் இருந்து கூடுதல் போலீசார் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

முதலமைச்சர் பங்கேற்கும் நாகர்கோவில் வேப்ப மூடு சந்திப்பு பொன்னப்ப நாடார் சிலை, மணிமண்டபம், கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை அலங்கார வளைவு, புத்தளம் முதல்வர் படைப்பகம் உள்ளிட்ட முதலமைச்சர் செல்லும் அனைத்து இடங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

உங்கள் அபிமான
தினதமிழ்
செய்திகளை
Whatsapp - ல்
பின் தொடர

## கோவையில் ரியல் லேண்ட் புரமோட்டர்ஸ்ன் ராயல் கிரீன் சிட்டி வீட்டுமனை திறப்பு விழா



கோவை பிப்: 23- கோவை மாவட்டம் ராமநாதபுரம் நஞ்சுண்டாபுரம் சாலை பகுதியில் ரியல் லேண்ட் புரமோட்டர்ஸ்ன் ராயல் கிரீன் சிட்டி வீட்டுமனை திறப்பு விழா திரு என் உதய சங்கர் தொழிலதிபர் தலைமையிலும் திரு என் ஸ்ரீஹரி நடராஜன் தொழில் அதிபர் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். முதல் விற்பனையை திரு சு ஞானசேகரன் தொழிலதிபர் தொடங்கி வைத்தார்.இது குறித்து செய்தியாளர்களிடம் கூறுகையில் 10 ஏக்கர் கொண்ட வீட்டு மனையில் முதலில் phase 1 இல் 4 ஏக்கரில் வீட்டுமனைகள் பிரிக்கப்பட்டு பிரமாண்டமான ஆர்ச்,10 மீட்டர் தார்சலையில்,கம்பி வேலி ஒவ்வொரு மனைகளுக்கும் குடிநீர் வசதி, மின்சார வசதி, மிக அருகில் மருத்துவமனை பெட்ரோல் பங்க் லுலுமால் மற்றும் பிற வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இன்று மட்டும் புக்கிங் செய்யும் நபர்களுக்கு திறப்பு விழாவை முன்னிட்டு ஒரு சென்ட்க்கு ஒரு கிராம் தங்க நாணயம் இலவசம்,கோவையில் இந்த வீட்டுமனை எங்களது முதல் கிளையாகும் என்றுரியல் லேண்ட் புரமோட்டர் நிர்வாக இயக்குனர் ஆர் ஜி ரவிந்திரன் தெரிவித்தார். இதில் சிறப்பு அழைப்பாளர்களாக தொழிலதிபர் எம் சுந்தரம் தேவர், கோவிந்தராஜன் செந்தில் குமார் ராஜி, சபரி கார்த்திக், மனோகரன்,ராஜகுமார், மோகன் ரமணா,ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## உலக அமைதி க்கான புத்தர் கோவிலில் ஸ்ரீ கோமதி அம்பாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சி



சங்கரன்கோவில், பிப் :23- சங்கரன்கோவில் அருகே வீரிருப்பு உலக அமைதிக்கான புத்தர் கோவிலில் ஸ்ரீ கோமதி அம்பாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது

முன்னதாக உலக அமைதிக புத்தர் கோவிலில் அமைதி கோபுரம் திறக்கப்பட்டு ஓராண்டு நிறைவு பெற்றது புத்தர் கோவிலில் ஓராண்டு நிறைவு விழாவும் மகாத்மா காந்தி பீ யூ ஜி குருஜி அமைதி மையம் கண்காட்சிக்கூடம் திறப்பு விழாவும் நடைபெற்றது திறப்பு விழாவில் அரசு அதிகாரிகள் , விஜபிகள், மற்றும் பல்வேறு உலக வெளிநாடுகளைச் சேர்ந்த புத்த பிக்குகள், பக்தர்கள் கலந்து கொண்டனர் விழாவில் ஸ்ரீ கோமதி அம்பாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவிகளின் கிராமிய கலைகள் ஒயிலாட்டம் கரகாட்டம், பரதம், உள்ளிட்ட சிறப்புமிக்க நடனங்களையும், நடன சாகசங்களையும் மாணவ மாணவிகள் செய்து காட்டி அசத்தினர் நிகழ்ச்சிகளை ஸ்ரீ கோமதி அம்மன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதல்வர் ந, பழனிச்செல்வம் தொகுத்து வழங்கினார் நடன நிகழ்ச்சி ஏற்பாடுகளை பள்ளி செயலர் எஸ் கே ராஜேஷ் கண்ணா, ஆலோசனைப்படி மற்றும் ஆசிரிய பெருமக்கள் மாணவ மாணவிகள் சிறப்பாக செய்திருந்தனர் அமைதி கோபுரம் ஓராண்டு நிறைவு விழாவின் ஏற்பாடுகளை புத்த பிக்குகள், இஸி தானி ஜி, லீலாவதி, சிகுசா கியு முரா, ஆகியோர் கொண்ட குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.

## தருமபுரி நான்கு ரோடு சந்திப்பில் பறக்க முடியாமல் இருந்த புறாவை காப்பாற்றிய போக்குவரத்து காவலரின் மனிதாபிமான நிகழ்வு



தருமபுரி பிப். 23- தருமபுரி நான்கு ரோடு சந்திப்பு எப்பொழுதும் போக்குவரத்து நிறைந்து பரபரப்பாக காணப்பட்டு வருகிறது. இந்த நிலையில் திடீரென ஒரு புறா பறக்க முடியாமல் சாலையிலேயே விழுந்தது இதை கவனித்த போக்குவரத்துக் முதல் நிலை காவலர் கார்த்திக் புறாவை மீட்டு அதற்கு முதலுதவி செய்தார். தொடர்ந்து சோர்வாக இருந்த புறாவிற்கு குடிப்பதற்கு தண்ணீர் கொடுத்து சிறிது நேரம் வைத்திருந்து அதனை பறக்க விட்டார். பறக்க முடியாமல் தவித்த புறாவிற்கு மனிதாபமான முறையில் முதலுதவி செய்து பறக்கவிட்ட சம்பவம் அனைவராலும் பாராட்டப்பட்டது.



மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் நடைபெறவுள்ள பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக மதுரைக்கு வருகை தந்த மாண்புமிகு இந்திய குடியரசு துணைத் தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் அவர்களை மதுரை விமானநிலையத்தில் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள்பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்.

## செங்கோட்டையில் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டம்: உளவுத் துறை எச்சரிக்கை



புதுடெல்லி, பிப்.23- டெல்லி செங்கோட்டை, முக்கிய வழிபாட்டுத் தலங்களில் தாக்குதல் நடத்த லஷ்கர் தீவிரவாத அமைப்பு திட்டமிட்டுள்ளதாக உளவுத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

டெல்லி செங்கோட்டை, சாந்தினி சவுக்கில் ஒரு கோயில் உட்பட நாடு முழுவதும் முக்கிய வழிபாட்டுத் தலங்களிலும் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளதாக உளவுத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.


பாகிஸ்தானைச் சேர்ந்த லஷ்கர் தீவிரவாத அமைப்பு, தாக்குதல் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக உளவுத் துறை எச்சரித்துள்ளது. இதையடுத்து, டெல்லி செங்கோட்டை, பொது மக்கள் அதிகம் கூடும் இடங்கள், நாடு முழுவதும் உள்ள முக்கிய வழிபாட்டுத் தலங்களில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த பிப்ரவரி 6ம் தேதி பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் மசூதி ஒன்றில் நிகழ்த்தப்பட்ட தற்கொலைப் படைத் தாக்குதலில் 31 பேர் உயிரிழந்தனர். இதக்கு ஐஎஸ் தீவிரவாத அமைப்பு பொறுப்பேற்றது. எனினும், இந்தத் தாக்குதலுக்கு பழிவாங்கும் நோக்கில் லஷ்கர் இதொய்பா அமைப்பு இந்தியாவில் தாக்குதல் நடத்த சதித் திட்டம் தீட்டி இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2025, நவம்பர் 10ம் தேதி டெல்லி செங்கோட்டை அருகே நிகழ்ந்த கார் குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அந்தத் தாக்குதலில் 12 பேர் உயிரிழந்தனர். மேலும் சுமார் 24 பேர் காயமடைந்தனர்.

இது தொடர்பான வழக்கை என்ஐஏ விசாரித்து வருகிறது. டிஎன்ஏ பரிசோதனை முடிவுகளின்படி, ஃபரிதாபாத்தில் உள்ள அல்ஃபலா பல்கலைக்கழக மருத்துவர் உமர் முகமது என்பவர் அந்தக் காரை ஓட்டிச் சென்றதும் அவர் உயிரிழந்ததும் உறுதி செய்யப்பட்டது.

## திமுகவிடம் 5 தொகுதிகள் கேட்டுள்ளோம் ஐயுஎம்எல் தலைவர் காதர் மொகிதீன்



சென்னை, பிப்.23- எதிர்வரும் தமிழக சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு திமுக, தனது கூட்டணி கட்சிகளுடன் தொகுதி பங்கீடு சார்ந்த பேச்சுவார்த்தையை தொடங்கியுள்ளது. இன்று தொடங்கிய இந்த பேச்சுவார்த்தையில் முதல் கட்சியாக இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சி பங்கேற்றது. அப்போது திமுகவிடம் ஐந்து தொகுதிகளை கேட்டுள்ளதாக அக்கட்சியின் தலைவர் காதர் மொகிதீன் தெரிவித்தார்.

திமுகவின் மரபின்படி இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சிக்கு முதல் அழைப்பு விடுக்கப்பட்டது. இந்த பேச்சுவார்த்தையில் திமுக தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தை குழுவை சேர்ந்த டி.ஆர். பாலு, கே.என்.நேரு, திருச்சி சிவா, ஆ.ராசா, ஆர்.எஸ்.பாரதி, எ.வ.வேலு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பங்கேற்றனர். ஐயுஎம்எல் சார்பில் அக்கட்சியின் தலைவர் காதர் மொகிதீன் மற்றும் முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றனர்.

தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தைக்கு பின்னர் செய்தியாளர்களை காதர் மொகிதீன் சந்தித்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது: “திமுக கூட்டணியை மேலும் பலமடைய செய்யும் வகையில் சில புதிய கட்சிகள் கூட்டணியில் இணைந்துள்ளன. நாங்கள் ஐந்து தொகுதிகளை திமுகவிடம் கேட்டோம்.

புதிய கட்சிகள் கூட்டணியில் இணைந்துள்ள காரணத்தால் தொகுதிகளை விட்டுக்கொடுக்க வேண்டும் என திமுக தெரிவித்தது. இதையடுத்து 5 தொகுதிகள் இல்லையென்றால் 4 தொகுதிகளாவது கொடுத்தால் நன்றாக இருக்கும் என தெரிவித்துள்ளோம்” என்றார்.

தொடர்ந்து செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தபோது, அவர் மயக்கமடைந்தார். அவருடன் இருந்தவர்கள் அவருக்கு முதலுதவி சிகிச்சை அளிக்க அண்ணா அறிவாலயத்துக்குள் அழைத்து சென்றனர். ரம்ஜான் மாதத்தையொட்டி முஸ்லிம்கள் நோன்பு கடைப்பிடித்து வருகின்றனர். அதன் காரணமாக அவர் மயக்கமடைந்து இருக்கலாம் எனத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

மதிமுக, மனிதநேய மக்கள் கட்சி உடன் திமுக தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை நடத்த உள்ளது. பிப்.26, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மற்றும் பிப்.27 இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உடன் பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. திமுக கூட்டணியில் விசிக, காங்கிரஸ், தேமுதிக உள்ளிட்ட கட்சிகள் உள்ளன.



மதுரை மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் நடைபெறவுள்ள பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக மதுரைக்கு வருகை தந்த மாண்புமிகு இந்திய குடியரசு துணைத் தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் அவர்களை மதுரை விமானநிலையத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே. பிரவீன் குமார் இ.ஆ.ப., அவர்கள் புத்தகம் கொடுத்து வரவேற்றார்.

உங்கள் அபிமான
தினதமிழ்
செய்திகளை
Whatsapp-ல்
பின் தொடர

## மேலாடையை களைந்து போராட்டம்: 4 பேருக்கு 5 நாள் போலீஸ் காவல்




புதுடெல்லி, பிப்.23- டெல்லி ஏஐ மாநாட்டில் மேலாடையை களைந்து போராட்டம் நடத்திய இளைஞர் காங்கிரஸ் தொண்டர்கள் 4 பேரை 5 நாள் போலீஸ் காவலில் விசாரிக்க நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது. ஏஐ மாநாட்டு அரங்கில் பிரதமர் மோடி மற்றும் அமெரிக்க வர்த்தக உடன்பாட்டுக்கு எதிராக அவர்கள் முழக்கமிட்டனர்.கைது செய்யப்பட்ட 4பேரும் நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர். சர்வதேச அளவில் நாட்டை அவமதிக்கும் ஆழமான சதி உள்ளதால் அவர்களை விசாரிக்க 5 நாட்கள் அனுமதிக்க வேண்டும் என்று போலீஸார் கோரினர். அதை ஏற்ற நீதிமன்றம் 4 பேரையும் போலீஸ் காவலில் விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

## ரூ.5 லட்சம் லஞ்சம் வாங்கிய கர்நாடக பாஜக எம்எல்ஏ கைது



பெங்களூரு, பிப்.23- கர்நாடகாவின் கதக் மாவட்டம் ஷிரஹட்டி தொகுதி பாஜக எம்எல்ஏ டாக்டர் சந்துரு லமானி. இவர் கட்டிட ஒப்பந்ததாரர் விஜய் பூஜார் என்பவரிடம் நீர்ப் பாசன திட்டம் ஒன்றின் அனுமதியை பெற்று தருவதற்கு ரூ.11 லட்சம் லஞ்சம் கேட்டுள்ளார்.

இதுகுறித்து விஜய் பூஜார் லோக் ஆயுக்தா போலீஸில் புகார் அளித்தார். அவர்கள் கூறிய அறிவுரையின்படி நேற்று பிற்பகல் 2 மணிக்கு விஜய் பூஜார், பாஜக எம்எல்ஏ சந்துரு லமானிக்கு சொந்தமான பாலாஜி மருத்துவமனையில் ரூ.5 லட்சம் பணத்தை வழங்கினார்.

அப்போது லோக் ஆயுக்தா போலீஸார் மருத்துவமனைக்குள் நுழைந்து அவர்களிடம் இருந்து பணத்தை கைப்பற்றினர். இதையடுத்து, சந்துரு லமானி, அவரது உதவியாளர்கள் மஞ்சுநாத் வால்மீகி, குருநாயக் ஆகிய 3 பேரையும் போலீஸார் கைது செய்தனர்.

## சூழ்ச்சிகளை வீழ்த்துவதற்கு பெரியார் தேவைப்படுகிறார் தி.மு.க.துணை பொது செயலாளர்ஆ. இ ராசா



தஞ்சாவூர் பிப். 23- அடக்கு முறை வடிவங்கள் மாறி வரும் நிலையில், சூழ்ச்சிகளை வீழ்த்துவதற்கு பொரியார் தேவைப் படுகிறார். என்றார் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும் மக்களவை உறுப்பினருமான ஆர். இராசா

. தஞ்சாவூர் திலகர் திடலில் நடைபெற்ற திராவிடர் கழக இளைஞரணி, திராவிட மாணவர் கழக மாநில மாநாட்டில் அவர் மேலும் பேசியதாவது:

நம்கவனத்தை திசை திருப்பு வதற்காக பெரியார் ஒன்றும் செய்யவில்லை எனக் கூறி வருகின்றனர். பெரியாரை யாரும் இழிவு படுத்த முடியாது .சுருக்கி விட முடியாது .இந்த மண்ணில் இந்துத்துவாதிகளால் கட்டத்திற்கு ள் அடக்க முடியாத ஒரு நெருப்பு பெரியார் தான். அவருடைய தத்துவம் நூறு ஆண்டுகளைக் கடந்தும் வாழ்கிறது

இப்போதுள்ள இளைஞர்களுக்கு பழைய வரலாறு தெரியவில்லை. அதை படிக்கவும் இல்லைஇப்போது ஜாதி இல்லை, தமிழ் மொழிக்கு ஆபத்தில்லை என கூறுகின்றனர் ஆனால், இப்போது வடிவங்கள் மாறி இருப்பதை இளைஞர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்

திராவிடர் நாடு பிரிவினை கேட்ட பெரியார் .தமிழ்நாடு தமிழருக்கே சொந்தம் எனக் கூறினார். அந்த முழக்கம் இப்போது மாநில சுயாட்சி யாக மாறி இருக்கிறது. ஆனால் நாடாளுமன்றத்தில் கூட திமுக பிரிவினை பேசுகிறது எனக் கூறுகின்றனர்

நீலகிரி தொகுதிக்கு வந்த பாஜக முன்னாள் தலைவர் நட்டா, நாங்கள் எவ்வளவோ செய்து பார்க்கிறோம் தமிழ்நாடுதனியாகவே இருக்கிறது என பேசினார் .இதுவரை தமிழ் நாட்டை நாங்கள் பிரிப்பதாக கூறியவர்கள், இப்போது அவர்களே தமிழ்நாடு தனியாக இருக்கிறது என கூறுகின்றனர்

பெரியாரின் தத்துவத்தை திமுக தொடர்ந்து முன்னெடுத்துச் செல் கிறது. அதற்கு வற்றாத ஜீவ ஊற்றாக தாய் கழகம் இன்னும் எங்களை இயக்கிக் கொண்டிருக் கிறது. ஆனால் அப்போது இருந்த அடக்குமுறை வடிவங்கள் இப்போது வேறு, வேறு முறையில் வருகிறது .அந்த சூழ்ச்சிகளை எல்லாம் வீழ்த்துவதற்கு பெரியார் இன்றைக்கும் தேவைப்படுகிறார் எந்த வடிவத்தில் அடக்குமுறை இருக்கிறதோ, அந்த வடிவத்துக் கெல்லாம் பெரியார் தேவைப் படுவார் என்றார் இராசா.

மாநாட்டில் நீட் தேர்வை மத்திய அரசு ரத்து செய்ய வேண்டும். 2026 சட்டசபை தேர்தலில் திமுக மற்றும் கூட்டணி கட்சிகள் மகத்தான வெற்றி பெற எல்லா வகையிலும் திராவிட கழகம் பாடுபடும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.மேலும் திராவிடர் கழக தலைவர் கி வீரமணி நிறைவு உரையாற்றினார்

மாநாட்டிற்கு திராவிட மாணவர் கழக மாநில செயலாளர் செந்தூர பாண்டியன் தலைமை வகித்தார் தஞ்சாவூர் மக்களவை உறுப்பினர் முரசொலி, திமுக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் எஸ் எஸ் பழனி மாணிக்கம், சட்டப் பேரவை உறுப்பினர் துரை .சந்திர சேகரன் ,முன்னாள் அமைச்சர் ஆர் வைத்திலிங்கம், மேயர் சண். ராமநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.